**<u>சுருக்கம்</u>**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் அணுமின்நிலையத்திற்கு எதிரே பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு உருவ வெண்கலச்சிலையை நிறுவ – அரசு அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை

அரசு ஆணை (நிலை) எண். 110 நாள் 24.9.2009.

படிக்கப்பட்டது:-

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை நாள் 12.6.1995
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் துறை நாள் 23.11.1998.
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.சி2/78845/08 நாள் 18.8.2009.

* * * * *

**<u>ஆணை</u>:–**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமம், கூடன்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரே உள்ள புல எண்.248/1ஏ–ல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைப்பதற்கு இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கூடன்குளம் காமராஜர் கல்வி அறக்கட்டளை தலைவர் திரு சி. பூமி ஆகியோர் அனுமதி கோரியிருந்தனர்.

2. மேற்படி புல எண்.248/1ஏல் மொத்த விஸ்தீர்ணம் 0.13.0 ஹெக்டேர் கிராம கணக்குகளில் ‘சாலை‘ எனவும் மேற்படி இரு புலங்களின் மத்தியில் தார்ரோடு செல்கிறது என்றும் இந்த சாலையின் மொத்த அகலம் 15 மீட்டர் எனவும் இதில் தென்பகுதியில் புல எண்.248/1ல் 2.2X2.2ல் மேடை அமைத்து காமராஜர் சிலை வைக்கப்படவுள்ளது எனவும், மேற்படி சிலை அமைக்கும் இடத்திலிருந்து 55 மீட்டர் கிழக்கே பேருந்து நிறுத்தக் கட்டிடம் உள்ள என்றும், மேற்படி சிலை அமைப்பது குறித்து கிராமத்தில் ‘A1’ நோட்டீஸ் விளம்பரம் செய்ததில் ஆட்சேபனை எதுவும் வரவில்லை என்றும் சிலை அமைப்பதினால் போக்குவரத்திற்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது எனவும், மேற்படி சிலையை பராமரிப்பதற்கான செலவினை மனுதாரர் திரு. பூமி அனந்த பெருமாள் என்பவர் ஏற்றுக் கொள்வதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்று சேரன் மகாதேவி கோட்டாட்சியர் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்படி புலத்தில் காமராஜர் முழு உருவ வெண்கலச்சிலை அமைக்க காவல்துறை சார்பில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். ஆகவே திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமம், கூடன்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரே உள்ள புல எண்.248/1ஏல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவ அரசின் அனுமதி அளிக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

த.பி.பா/–

**3.** திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மேலே படிக்கப்பட்ட ஒன்று மற்றும் இரண்டில் கண்டுள்ள அரசு கடிதம் மற்றும் அரசாணையின்படி ஆய்வு செய்து, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் கிராமம், கூடன்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிரே உள்ள புல எண்.**248/1**ஏல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(i) சிலை வைப்பவர்களின் பொருட்செலவிலேயே சிலையினை அமைத்து அதனை பாதுகாத்து மற்றும் பராமரிக்கப்பட வேண்டும்.

(ii) சிலையைச் சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

(iii) சிலையை நல்ல உயரத்தில் பீடம் அமைத்து அதன் மேல் சிலையை நிறுவ வேண்டும்

(iv) கம்பித் தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும்

(v) சிலை உள்ளே அடைபட்டது போல் கம்பி வேலி அமைக்க கூடாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி மாவட்டம்.

நகல்:
பொதுத் (சட்டம் (ம) ஒழுங்கு) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

1.3